# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tnerc.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ் – மின் குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு எண் : 27/2012**

திரு. மு. வெள்ளிங்கிரி,
த/பெ. திரு. முருகேசன்,
5, ஏ2 – மி.வா. காலணி,
காரமடை – 641 104,
கோவை மாவட்டம் .........மேல்முறையீட்டாளர்
(திரு. மு. வெள்ளிங்கிரி)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோயம்புத்தூர் – 641 102 ..........எதிர்மனுதாரர்
(திரு. வெங்கடேசன்
உதவி செயற் பொறியாளர்)

**கேட்புரை நாள் : 23–8–2012**

**ஆணை நாள் : 31.8.2012**

**ஆணை:**

திரு. மு. வெள்ளிங்கிரி, காரமடை அவர்களின் 18–6–2012 நாளிட்ட மனு, மேல் முறையீட்டு மனு எண் 27/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மேல் முறையீட்டு மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை (hearing) 23–8–2012 அன்று நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனு, எதிர் மனுதாரரின் பதிலுரை, பதிவு

செய்யப்பட்ட ஆவனங்கள் மற்றும், இருதரப்பின் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களையும் ஆராய்ந்து மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

கொமரபாளையம் கிராமம் தேக்கப்பட்டி மின் பகிர்மானத்திற்கு உட்பட்ட துண்டிக்கப்பட்ட விவசாய மின் இணைப்பு எண் 143–003–190 ற்கு மறு மின் இணைப்பு வழங்க உத்தரவு இடும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் நிலுவையில் உள்ள வழக்கு எண் 222/2011 ற்கான எதிர் மனுவை (counter) விரைவில் சமர்பிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

2) <u>வழக்கின் சுருக்கம்:</u>

திரு. மு. வெள்ளிங்கிரி, காரமடை அவர்கள் கொமரபாளையம் கிராமம் கச எண் 173/2ல் உள்ள நிலத்தில் விவசாயம் செய்து வருவதாகவும், அதற்கு கச எண் 173/5ல் உள்ள கிணற்றிலுள்ள விவசாய மின் இணைப்பு எண் 143–003–190 ஐ உபயோகித்து விவசாயம் செய்து வருவதாகவும், அந்த மின் இணைப்பு, எதிர் மனுதாரரால் 21–03–2011 அன்று துண்டிக்கப்பட்டதால், தன்னுடைய விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் மறு இணைப்பு கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் இது சம்பந்தமாக, மேட்டுப்பாளையம் நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்/கோவை மின்பகிர்மான வட்டம் / வடக்கு, மேற்கண்ட மனுவை விசாரித்து, மேற்கண்ட கோரிக்கையின் மீது மனுதாரர் தொடர்ந்த வழக்கு எண் 222/2011 மேட்டுப்பாளையம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மன்றத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று தீர்ப்புரை

வழங்கியுள்ளது. அந்த தீர்ப்புரை தனக்கு திருப்திகரமாக இல்லை என்று மேல் முறையீட்டாளர் மின் குறைதீர்ப்பாளரிடம் மேல் முறையீடு செய்துள்ளார்.

**3) <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

(i) விதிமுறைகளுக்கு மாறாக, விவசாய பயன்பாட்டில் உள்ள மின் இணைப்பு எண் **143–003–190**ஐ மனையிடங்களாக பிரிப்பதாக கூறி கடந்த **21–03–2011** அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

(ii) குமாரபாளையம் கிராமம் கச எண் **173/5, 173/2** ஆகியவை விவசாய பயன்பாட்டிற்காக கடந்த **12** வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. க.ச. எண் **173/5**ல் இருந்து க.ச. எண் **173/2**க்கு பாசன வசதி ஏற்படுத்தி விவசாயம் செய்யப்படுகிறது. க.ச. எண் **173/5**ல் உள்ள நிலங்கள் வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டனர். ஆனால் கச எண் **173/5**ல் உள்ள கிணற்றிலிருந்து தான் தற்பொழுதும் க.ச. எண் **173/2**ல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

(iii) மேற்படி பாகத்தில் கடந்த **25–8–1999** அன்று பத்திர எண் **4008/99**இன்படி பட்டா மாறுதலும், மின் இணைப்பு பெயர் மாற்றவும் மேல் முறையீட்டாளரின் பெயரில் கிரையம் பெற்றுள்ளார்.

(iv) மேட்டுபாளையம் வட்டாட்சியர் அவர்களின் அலுவலக எம்.டி.ஆர் **81/2000–01** நாள் **10–4–2000** எண்ணின்படி க.ச. எண் **175/5** (பட்டா எண் **259**) ல் கூட்டாக தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளார்.

(v) மேலும், (மின் இணைப்பை) விவசாய பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதாக **11–6–2008** அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

(vi) மேற்கண்ட மின் இணைப்பு எண் **190** துண்டிக்கப்பட்ட பின்புதான் **10–8–2011** அன்று K. பத்திரப்பன் என்பவரிடம் மின் இணைப்பு துண்டிப்பு செய்ய மனு பெற்றுள்ளனர்.

**4) <u>எதிர் மனுதாரரின் பதிலுரை:</u>**

எதிர் மனுதாரர், தன்னுடைய பதிலுரையில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

(i) மேல்முறையீட்டாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நுகர்வோர் அல்ல ஏன் எனில் அவர் மேற்கண்ட விவசாய மின் இணைப்பு எண்ணில் தன்னையும் நுகர்வோராக பதிவு செய்யப்பட வேண்டும் என்று இதுவரை கோரவில்லை.

(ii) மேல்முறையீட்டாளர், அந்த விவசாய மின் இணைப்பில் 1/3 பங்கினை 25–8–1999ல் வாங்கியுள்ளார். ஆனால் அவர் அந்த பாகத்தை வாங்கிய பின்பு திரு. பத்திரப்பன் பெயரில் அந்த மின் இணைப்பை மாற்றும் பொழுது மற்றும் Additional Compressor இணைப்பை பெறும் பொழுதும் தன்னுடைய பெயரையும் அந்த விவசாய மின் இணைப்பு உரிமைதாரர்களாக சேர்த்து கொள்ளவேண்டும் என்று கோரவில்லை.

(iii) மின் இணைப்பு எண் 190, 28–11–1994 அன்று க.ச.எண் 173/5ல் நடைபெறும் விவசாயத்திற்காக பெறப்பட்டது.

(iv) க.ச. எண் 173/5ல் உள்ள நிலங்கள், வீடுகட்டும் மனைகளாக மாற்றப்பட்டது என மார்ச் 2011 மாதம் நடந்த ஆய்வின் பொழுது தெரிந்தது. எனவே, மின் இணைப்பின் உரிமைதாரரான திரு. K. பத்திரப்பன் அவர்களிடம் அந்த மின் இணைப்பை விவசாயம் என்ற பிரிவிலிருந்து வர்த்தக பிரிவிற்கு 15 நாட்களுக்குள் மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அவரிடமிருந்து எந்த பதிலும் பெறப்படாததால் அந்த மின் இணைப்பு 21–3–2011 அன்று துண்டிப்பு செய்யப்பட்டது. அந்த தகவல் அவருக்கு 24–3–2011 அன்று தெரிவிக்கப்பட்டு கடிதம் பெற்றதற்கான ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

(v) மேல்முறையீட்டாளர் கிணறு, தண்ணீர், மற்றும் விவசாய மின் இணைப்பில் 1/3 பங்குக்கு உரிமையாளர் ஆனால் 173/5ல் உள்ள ஒரு செண்ட் நிலத்தில் 1/3 பங்குதான் அவருக்கு சொந்தம் 2/3 பங்குக்கு சொந்தமான உரிமையாளர் மொத்த நிலத்தையும், கிணற்றையும், விற்றுவிட்டார். எனவே க.ச. எண் 173/5ல் உள்ள கிணறு விவசாயத்திற்கு மட்டும் தான் பயன்படுத்தப்படும் என்று கூறமுடியாது.

(vi) தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி தொகுப்பு 2004ன் விதி 33(4) ன் படி, விவசாய பயன்பாடு இல்லை என்பதால், அந்த விவசாய மின் இணைப்பை துண்டிக்க உரிமம்தாரருக்கு உரிமை உள்ளது.

(vii) மேல்முறையீட்டாளர் க.ச. எண் (நில அவை எண்) 173/5 ல் உள்ள கிணற்றிலிருந்து அதன் அருகிலுள்ள வேறு நில அளவை எண் உள்ள நிலத்திற்கு நீரை உபயோகப்படுத்த உரிமை இல்லை.

(viii) இந்த மனுவில் கோரியுள்ள நுதல் பொருளின் மீது உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், வேறு மன்றம் அதன்மீது தீர்வு வழங்கமுடியாது.

(ix) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வழக்கு எண் 222/11 ற்கான பதிலுரையை அரசு வழக்கறிஞரிடம் மேட்டுப்பாளைய மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக கொடுத்து விட்டது.

**5) <u>மின் குறைதீப்பாளரின் கேட்புரை:</u>**

மேல் முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23–8–2012 அன்று மின்குறைதீர்பாளரால் நேரடி விசாரணை நடத்தப்பட்டது.

**6) <u>மின்குறை தீர்பபாளரின் தீர்வு:</u>**

**6.1** மேல்முறையீட்டாளர் திரு. மு. வெள்ளங்கிரி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு, தன் தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய மேல் முறையீட்டு மனுவில் கூறிய வாதங்களையே கேட்புரை நாளிலும் எடுத்துரைத்தார்.

**6.2** எதிர் மனுதாரரின் சார்பில் திரு. வெங்கடேசன் உதவி செயற் பொறியாளர்/ மேட்டுபாளையம், (நகரம்) அவர்கள் கலந்து கொண்டு எதிர்மனுதரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். திரு. வெங்கடேசன் அவர்களும், எதிர் மனுவில் கூறிய வாதங்களையே மீண்டும் கூறினார்.

**6.3** மேற்கண்ட கேட்புரையில் கலந்து கொண்ட மேல்முறையீட்டாளர், மற்றும் எதிர் மனுதாரரின் சார்பில் கலந்து கொண்ட, இருவருமே, மேட்டுபாளையம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் திரு. வெள்ளங்கிரியால் தாக்கல் செய்யப்பட்ட மின் இணைப்பு எண் 190ஐ மறு இணைப்பு செய்ய வேண்டும் என்ற வழக்கு எண் 222/2011 நிலுவையில் உள்ளது என்பதை தெரிவித்துள்ளனர்.

**6.4** எனவே, ஏற்கனவே, வேறு நீதிமன்றத்தில் இதுபோன்ற கோரிக்கை நிலுவையில் உள்ளதால், மின் குறைதீர்ப்பாளரின் முன் வழக்கெழு வினாவாக இருப்பது, மின்குறைதீர்ப்பாளர், இந்த வழக்கின் மீது தீர்வு ஏதேனும் வழங்க முடியுமா என்பது ஆகும்.

**6.5** மேற்கண்ட வழக்கெழு வினாவிற்கு தீர்வு காண்பதற்கு, நாம் ''மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள் 2004ன் விதி 17(4) ஐ ஆராய வேண்டும் அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*''17(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த இரண்டு மாதங்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே*

*கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*
*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.”*

**6.6** மேற்கண்ட விதி 17(4) (ஈ) ன்படி முறையீட்டில் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையே வழங்கியிருந்தாலோ, அந்த மேல் முறையீட்டு மனுவை மின்சார குறை தீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ள முடியாது.

**6.7** இந்த மேல் முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் உள் கோரிக்கையான துண்டிக்கப்பட்ட விவசாய மின் இணைப்பை மறு இணைப்பு செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வழக்கு எண் 222/2011, இன்னும், மேட்டுப்பாளையம் மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளதால், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளரின் ஒழுங்குமுறை விதிகள் 2004இன் 17(4) (ஈ) விதியின்படி, இந்த வழக்கை மின் குறை தீர்ப்பாளர் எடுத்துக் கொள்ள முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**6.8** மேலும், எதிர்மனுதாரர், வழக்கு எண் 222/2011ற்கான எதிர்மனுவை அரசு வழக்கறிஞரிடன் ஒப்படைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளதால் அவரின் மற்றொரு கோரிக்கையான நிலுவையில் உள்ள வழக்கிற்கான எதிர்மனுவை உடனே சமர்ப்பிக்க வேண்டும் என்று வேண்டுகோளும் நிறைவேறிவிட்டதாக தீர்வு செய்யப்படுகிறது.

7) <u>முடிவுரை:</u>

மேற்கண்ட பத்தி 6ல் உள்ள தீர்வின் படி, மின் குறை தீர்ப்பாளரால் மேற்கண்ட மனுவை விசரனைக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்பதால் மேல்முறையீட்டு மனு எண் 27/12 மின்குறை தீர்ப்பாளரால் தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின் குறைதீர்ப்பாளர்

பெறுநர் –

1. திரு. மு. வெள்ளிங்கிரி,
த/பெ. திரு. முருகேசன்,
5, ஏ2 – மி.வா. காலனி,
காரமடை – 641 104,
கோவை மாவட்டம்.

2. மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோயம்புத்தூர் – 641 102

3. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை, சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19எ, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.